ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,613 — 1966 ජනවාරි 7 වැනි සිකුරාදා — 1966.1.7

14,613 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு சனவரி மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)

## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. .. | 1 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவிதம் .. .. .. | 2 |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

எல். டி.—பி. 138/30

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 163 (2) ஆம் பிரிவின் கீழ் மகாதேசாதிபதி அவர்களால் ஆக்கப்பட்ட கட்டளை.

மேன்மைதங்கியவரின் ஆணை படி,

நி. விஜேவர்தன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

கொழும்பு.
1965 ம் ஞு டிசெம்பர் மீ 2 ந் உ.

### கட்டளை

மாநகர சபை நீதிவான்களின் சட்ட அதிகாரம் (269 ஆம் அத்தியாயமான) நாடு நகர் அமைப்புத்திட்டக் கட்டளைச சட்டத்தின்கீழான எல்லாக் குற்றங்களுக்கும் இத்தால் நீடிக்கப்படுகின்றது.

1-55—7.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,613

### முக்கிய விளம்பரம்

1966 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 20 ந் திகதி வியாழக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1966 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 21 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1966 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 16 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஞு தை (சனவரி) மீ 7 ம் உ.

எல். டி. பீ. 139/46
எல். ஜ். டி.—வ/8

## மாத்தளை மாநகர சபை

### களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மாத்தளை மாநகர சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், சபையின் நிருவாக எல்லைகளுக்குளிருக்கும் பிரதேசத்தில் நடைபெறும் (அக்கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கின்றபடியான) களியாட்டங்களின் பிரவேசக் கட்டணங்கள் மீது, இதனடியில் குறித்துள்ள வீதங்களின்படியான ஒரு வரியை, இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரமாகும் தேதியிலிருந்து இச்சபை இத்தால், விதித்துத் திரட்டுகின்றது.

| வரித்தொகை நீங்கலான, பிரவேசக்கட்டணம் | வரிவீதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 19 சதத்துக்கு மேற்பட்டு, 39 சதத்துக்கு மேற்படாவிடின் .. | 05 |
| (ஆ) 39 சதத்துக்கு மேற்பட்டு 59 சதத்துக்கு மேற்படாவிடின் | 10 |
| (இ) 59 சதத்துக்கு மேற்பட்டு, 79 சதத்துக்கு மேற்படாவிடின் | 15 |
| (ஈ) 79 சதத்துக்கு மேற்பட்டு 99 சதத்துக்கு மேற்படாவிடின் .. | 20 |
| (உ) 99 சதத்துக்கு மேற்பட்டு ரூ. 1.19 க்கு மேற்படாவிடின் .. | 25 |
| (ஊ) ரூ. 1.19 க்கு மேற்பட்டு ரூபா 1.39 க்கு மேற்படாவிடின் .. | 30 |
| (எ) ரூபா 1.39 க்கு மேற்பட்டு ரூபா 1.59க்கு மேற்படாவிடின் | 35 |
| (ஏ) ரூபா 1.59 க்கு மேற்பட்டு ரூபா 1.79 க்கு மேற்படாவிடின் | 40 |
| (ஐ) ரூபா 1.79 க்கு மேற்பட்டு ரூபா 1.99 க்கு மேற்படாவிடின் | 45 |
| (ஒ) ரூபா 1.99க்கு மேற்பட்டு ரூபா 2.49 க்கு மேற்படாவிடின் .. | 50 |
| (ஓ) ரூபா 2.49 க்கு மேற்பட்டு ரூபா 2.99 க்கு மேற்படாவிடின் | 60 |
| (ஔ) ரூபா 2.99 க்கு மேற்பட்டு ரூபா 3.49 க்கு மேற்படாவிடின் | 75 |
| (க) ரூபா 3.49 க்கு மேற்பட்டு ரூபா 3.99 க்கு மேற்படாவிடின் | 85 |
| (ங) ரூபா 3.99 க்கு மேற்பட்டு ரூபா 4.49க்கு மேற்படாவிடின் | 1 00 |
| (ச) ரூபா 5 ஆயின் .. .. .. | 1 25 |
| (ஞ) ரூபா 5 க்கு மேற்படின் | |
| (அ) முதலாவது ரூபா 5 க்கு .. .. | 1 25 |
| (2) கூடுதலான ஒவ்வொரு ரூபா 1 க்கும் அல்லது அதன் பாகத்துக்கும் .. .. .. | 25 |

எ. ஈ. கொகொளி மொரகொட,
நிரந்தரச் செயலாளர், உள்ளூராட்சியமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆடு நொவெம்பர் மீ 29 ந உ.

1-54—7.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,613

---

## நானுவிதம்

### செம்பியன்பற்று கிராமச் சபை

### கசாப்புச் சட்டம்

1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கச் சட்டத்தின் 6 ம் பிரிவால் திருத்தப்பட்டபடியான கசாப்புச் சட்டம் (அத்தியாயம் 201) இன் 7 ம் பிரிவின்படி கீழ்க்காணும் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள பெயர்வழிகாரர்கள் அவர்களின் பெயருக்கு எதிரே விபரிக்கப்பட்டுள்ள இடங்களில் 1966 ம் ஆண்டுக்கு கசாப்புக்கடைகள் நடாத்துவதற்கு என்னிடம் உத்தரவுப் பத்திரம் கோரி விண்ணப்பித்துள்ளனர் என்பதை இத்தால் விளம்பரப் படுத்துகிறேன்.

செம்பியன்பற்றுக் கிராமப் பகுதியில் வாழும் எவரேனும் உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்கவிரும்பினால், அவர்கள் இவ்வர்த்தமானி விளம்பரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்கிடையில் தமது மறுப்புக்கான காரணங்களைக் காட்டி இரு பிரதிகளில் எழுத்து மூலம் எனக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

#### அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயரும் முகவரியும் | கடை நடாத்தவிருக்கும் இடம் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|
| 1. அ. கிறிஸ்சாந்துஸ், தாளையடி, செம்பியன்பற்று | தாளையடி—பருத்தித்துறை மீன்பிடி ரேட்டில் தாளையடி சந்தியிலிருந்து ½ மைல் மேற்கேயுள்ள தாளையடி கடற்கரை என்னும் இடம் | மாட்டு இறைச்சியும் ஆட்டு இறைச்சியும் |
| 2. இ. மலக்கியாஸ், தாளையடி, செம்பியன்பற்று | தாளையடி கரையில் பஸ் திருப்பும் இடத்துக்கு எதிரிலுள்ள இரட்டை மாடிக் கட்டிட வளவு | மாட்டு இறைச்சியும் ஆட்டு இறைச்சியும் |

ஐ. ஆ. ஐயம்பிள்ளை,
தலைவர், கி. ச. செம்பியன்பற்று.

கிராமச் சபை அலுவலகம், செம்பியன்பற்று.
1965 ம் ஆடு டிசெம்பர் மீ 29 நஉ.

1-62—7.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,613

---

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடைபிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்றல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "டைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிரீம் கோட் புறொக்ரூல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும். விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியானதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம். கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.8.63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. | உள்ளூர் ச. | வெளியூர் ரூ. | வெளியூர் ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 | 50 | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 | 50 | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 25 | 00 | 33 | 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும். வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | தபால் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500. கொழும்பு. என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.